தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 4.12.2013

### தமிழகத்தில் மழை நீடிக்கும்

வங்கக் கடலில் உருவாகியுள்ள தீவிர காற்றழுத்தப் பகுதி வலுவடைந்து வருகிறது. இது புதன்கிழமைக்குள் (டிச.3) காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.இதனால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் புதன்கிழமை பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை, காஞ்சிபுரம் உள்பட மாநிலத்தின் பல இடங்களில் கனமழை பெய்யலாம் என்றும் வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கனமழை: தஞ்சையில் இன்று பள்ளிகளுக்கு விடுமுறை

வங்க கடலில் உருவாகியுள்ள புயல் சின்னம் வலுவடைந்ததை அடுத்து தொடர் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதையடுத்து  தஞ்சை மாவட்டத்தில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்த அறிவிப்பை தஞ்சை மாவட்ட ஆட்சியர் இன்று காலை வெளியிட்டுள்ளார்.

### கரூரில் பரவலாக மழை: அதிகபட்சமாக கிருஷ்ணராயபுரத்தில் 32மி.மீ.மழை பதிவு

கரூரில் பரவலாக மழை பெய்துள்ளது. இதில் அதிகபட்சமாக கிருஷ்ணராயபுரத்தில் 32 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.மாவட்டம் முழுவதும் திங்கள்கிழமை நள்ளிரவு முதல் செவ்வாய்க்கிழமை காலை வரை பெய்த மழையளவு:(மி.மீட்டரில்): அரவக்குறிச்சி 10.60, க.பரமத்தி 9.00, குளித்தலை 3.00, மாயனூர் 24.00, கரூர் 23.20, அணைப்பாளையம் 10.20, தோகைமலை 15.20, பஞ்சப்பட்டி 13.60, பாலவிடுதி 13.30, கடவூர் 8.40, கிருஷ்ணராயபுரம் 32.00, மைலம்பட்டி 25.40 மொத்தம் 187.90 மி.மீ.மழை பெய்துள்ளது.

**திருவண்ணாமலை சாலைகளில் திரியும் மாடுகளைப் பிடித்து ஏலம் விட வேண்டும்: குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**

திருவண்ணாமலை நகரில் போக்குவரத்துக்கு இடையூறாக சுற்றித் திரியும் மாடுகளைப் பிடித்து ஏலம் விட வேண்டும் என்று தாலுகா அளவிலான குறைதீர் கூட்டத்தில், விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை தாலுகா அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. கோட்டாட்சியர் முத்துக்குமாரசாமி தலைமை வகித்தார். வட்டாட்சியர் வேடியப்பன், சமூக பாதுகாப்பு வட்டாட்சியர் காமராஜ், வட்ட வழங்கல் அலுவலர் சுரேஷ், தலைமை நில அளவர் சண்முகம் உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளின் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் பேசுகையில், திருவண்ணாமலை நகரில் போக்குவரத்துக்கு இடையூறாக ஏராளமான மாடுகள் சுற்றித் திரிகின்றன. இவற்றால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது. இருசக்கர வாகன ஓட்டிகள் பலர் சிறு சிறு விபத்துகளில் சிக்கும் நிலை ஏற்படுகிறது. எனவே, நகரில் சுற்றித் திரியும் மாடுகளைப் பிடித்து ஏலம் விட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருவண்ணாமலை திருவள்ளுவர் சிலை பகுதியைச் சுற்றிலும் ஏராளமான ஆக்கிரமிப்புகள் உள்ளன. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, அப் பகுதியில் ரவுண்டானா அமைக்க வேண்டும். திருவண்ணாமலை நகரில் இயக்கப்படும் ஆட்டோக்கள் அதிக சப்தத்தை எழுப்பியபடியும், மற்றவர்களை பயமுறுத்தும் வகையிலான ஒலியை எழுப்பியபடியும் செல்கின்றன. இதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

சாதி, வருமானச் சான்றுகளை ஆன்லைனில் பெறும் திட்டத்தால் 10 நாட்களுக்கு மேல் ஆகிறது. ஓரிரு நாளில் சான்றிதழ் பெறும் வகையில் இத் திட்டத்தில் மாற்றம் கொண்டு வர வேண்டும். தாலுகா அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து

கொள்வதில்லை. இனிவரும் காலங்களிலாவது உயர் அதிகாரிகள் கலந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்காததால் அவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துப் பேசினர்.

இதையடுத்துப் பேசிய கோட்டாட்சியர் முத்துக்குமாரசாமி, விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளும் உரிய முறையில் பரிசீலிக்கப்பட்டு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்.

**நீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்: கொ.ம.தே.க. பொதுச் செயலாளர் ஈஸ்வரன்**

கொங்கு நாட்டின் எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு அனைத்து நீர்ப் பாசனத் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்று, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் ஈஸ்வரன் பேசினார்.

மொடக்குறிச்சி அருகே சோளங்காபாளையத்தில் நடைபெற்ற கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் அரசியல் எழுச்சி மாநாட்டிற்கு மாநில தலைமை நிலையச் செயலாளர் சூரியமூர்த்தி தலைமை வகித்தார். மொடக்குறிச்சி ஒன்றியச் செயலாளர் சிவசங்கர் வரவேற்றார். மாவட்ட செயலாளர் சுரேஷ் பொன்னுவேல், மாவட்ட துணைச் செயலாளர்கள் கனகராஜ், சன்மனோகர், மாவட்ட தலைமை நிலையச் செயலாளர் கார்மேகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் ஈஸ்வரன் பேசியது:

ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஏராளமானோர் பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது நிலவிவரும் மின்வெட்டினால் இவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். சென்னையைப் போல இரண்டு மணி நேர மின்வெட்டை இங்கும் அமல்படுத்த வேண்டும். உயர் நீதிமன்றக் கிளையை கோவையில் அமைக்க வேண்டும். 50 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாத பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றி கொங்கு நாட்டின் தண்ணீர் பிரச்னையை தீர்க்க அரசு முன்வர

வேண்டும். கொங்கு நாட்டின் எதிர்காலத் தேவையை கருத்தில் கொண்டு அனைத்து நீர்ப்பாசன திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும். கெயில் விவகாரத்தில் தமிழக அரசு மேல்முறையீடு செய்திருப்பது பாராட்டுக்குரியது. கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தாமதமின்றி நிவாரணத் தொகையை வழங்க வேண்டும் என்றார்.

இதைத் தொடர்ந்து மாநில அளவிலான வாலிபால் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அவர் பரிசு வழங்கிப் பாராட்டினார்.

முன்னதாக மொடக்குறிச்சி, அவல்பூந்துறை, அரச்சலூர், சாக்கவுண்டன்பாளையம் உள்ளிட்ட 40 இடங்களில் கட்சிக் கொடியை ஏற்றிவைத்து சிறப்புரையாற்றினார்.

மாநிலப் பொருளாளர் கே.கே.சி.பாலு, மாநில துணைப் பொதுச் செயலாளர் சக்தி நடராஜன், தங்கவேல், மாநில இளைஞரணி செயலாளர் இளம்பரிதி, கொங்கு நண்பர்கள் சங்க செயலாளர் கே.கே.ரமேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இளைஞர் அணி எஸ்.சி.ஆர்.கார்த்திகேயன் நன்றி கூறினார்.

**கறிக்கோழி விலையில் மாற்றமில்லை**

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோஆர்டினேஷன் கமிட்டி) திங்கள்கிழமை நிர்ணயம் செய்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.56 ஆக இருந்தது.

விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் செவ்வாய்க்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.முட்டை விலைநாமக்கல், டிச. 3: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.4.03, சென்னையில் ரூ.3.92.

**நீர்-நிலவளத் திட்ட ஆலோசனைக் கூட்டம்**

பொள்ளாச்சியை அடுத்துள்ள ஜல்லிபட்டி ஊராட்சியில் நீர்- நிலவளத் திட்டத்தின் கீழ் ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது ÷பொள்ளாச்சியை அடுத்த ஜல்லிபட்டி ஊராட்சி, நீர்-நிலவளத் திட்டத்தின் கீழ் முன்மாதிரி கிராமமாக மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை ஜல்லிபட்டி ஊராட்சி அலுவலகத்தில் ஊராட்சித் தலைவர்

செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. துணைத் தலைவர் சௌந்தரராஜ் முன்னிலை வகித்தார்.

÷வேளாண் பொறியியல் துறை உதவிப் பொறியாளர் செல்வி, உதவி வேளாண்மை அலுவலர் ராமகிருஷ்ணன், உதவி தோட்டக்கலை அலுவலர் முருகன், உதவி வேளாண் விற்பனை அலுவலர் செந்தில்குமார், ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் உஷா நந்தினி தேவி, பொதுப்பணித் துறை உதவிப் பொறியாளர் ராஜன், கால்நடைத் துறை உதவி மருத்துவர் சரவணக்குமார் ஆகியோர் விவசாயிகளுக்கு அந்தந்தத் துறைகளில் உள்ள மானியங்கள் குறித்து விளக்கமளித்தனர்.

÷வேளாண் பொறியியல் துறை உதவிப் பொறியாளர் செல்வி பேசுகையில், "வேளாண் பொறியியல் துறை சார்பாக சிறு-குறு தென்னை விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியம் அளிக்கப்படுகிறது. விவசாயிகள் தங்களுக்கு வழங்கப்படும் மானியங்களைப் பயன்படுத்தி விவசாயத்தை மேம்படுத்த வேண்டும்' என்றார்.

**கரும்புகள் தேக்கம் :விவசாயிகள் வேதனை**

திருவாலங்காட்டில் உள்ள சர்க்கரை ஆலை வளாகத்தில் கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும் கரும்புகள் தேங்குகின்றன.

தேவைக்கு அதிகமாக வெட்டு உத்தரவுக் காரணமாக தேக்க நிலை உருவாவதால் கரும்பின் எடை குறைந்து நஷ்டத்தை ஏற்படுத்துகிறது என்று விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

திருவாலங்காட்டில் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அரக்கோணத்தை சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து கரும்பு அனுப்பப்படுகிறது.

நாளொன்றுக்கு 2,400 டன் கரும்பு அரைக்கும் சக்தி கொண்ட இந்த ஆலையில் கடந்த 50 நாள்களில் ஒரு லட்சம் டன் வரை கரும்பு அரைக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக ஆலை வளாக மற்றும் ஆலையின் பிரிவு அலுவலகங்களில் பணிபுரியும் கரும்பு வளர்ச்சி அலுவலர்களால் மில் அரவை அளவை மீறி, அன்றைய தின தேவைக்கும் அதிகமாக கரும்பு வெட்டு உத்தரவு தினமும் வழங்கப்படுதாக விவசாயிகள் கூறுகின்றனர்.இந்த உத்தரவு காரணமாக கரும்புகளை வெட்டி லாரி வரும் வரை தங்களது நிலத்திலேயே வைக்கின்றனர்.இதனால் மழையிலும், வெயிலிலும் கரும்புகள் கிடக்கின்றன.

ஆலை வளாகத்துக்குத் தேவைக்கு அதிகமாக கரும்புகள் வந்துவிடுவதால் பணிமனை அதிகாரிகள் லாரிகளுக்கு அனுமதி உத்தரவை அளிக்காமல் இருப்பதால் சாலையிலேயே லாரிகள் நிறுத்தப்படுகின்றன. இதனால் திருவாலங்காட்டில் ஆலை பகுதியின் 4 புறமும் சாலை ஓரங்களில் சுமார் 250-க்கும் மேற்பட்ட லாரிகள் காத்துக் கொண்டிருக்கின்றன. வெட்டப்பட்டு நிலத்திலும், ஆலை வளாகத்திலும் கரும்புகள் தேங்கிவிடுகிறது. மழையிலும் வெயிலிலும் இருப்பதால் கரும்புகளின் எடை குறைந்து போகிறது என விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.இதுகுறித்து திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயக்குநர் காந்தி கூறியதாவது:கரும்பு எடை குறைவதால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. எனவே ஆலை கரும்பு வளர்ச்சி அதிகாரிகள் கவனத்துடன், ஆலை தேவைக்கேற்ப வெட்டு உத்தரவை வழங்க வேண்டும். இதில் ஆலை நிர்வாகம் கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றார்.

இதுகுறித்து கரும்பு வளர்ச்சி அதிகாரி (பொறுப்பு) ஹரிஷ்கண்ணாவை கேட்டபோது, உயர் அலுவலர்களைத் தொடர்பு கொள்ளுங்கள் என்

**மழை எதிரொலி: சென்னை ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் மழை காரணமாக குடிநீர் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

மழை நீடிக்கும் பட்சத்தில் ஏரிகளின் நீர்மட்டம் கணிசமாக உயர வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. சென்னையின் குடிநீர் தேவைக்காக பூண்டி, சோழவரம், செம்பரம்பாக்கம், புழல் உள்ளிட்ட ஏரிகளில் இருந்து நீர் விநியோகிக்கப்படுகிறது. இதைத் தவிர கடலூர் மாவட்டம் வீராணம் ஏரி மற்றும் ஆந்திர மாநிலம் கண்டலேறு அணை ஆகியவற்றில் இருந்து சென்னைக்கு நீர் வந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் நகருக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் போதிய நீர் இருப்பு இல்லை.

இதனால் கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக சென்னையில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் மட்டுமே குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மழை பெய்து நீர் ஆதாரங்கள் நிரம்பினால் மட்டுமே குடிநீர் விநியோகம் சீராகும் சூழல் தற்போது உள்ளது.

இந்நிலையில் வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி மற்றும் பருவமழையின் காரணமாக சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற மாவட்டங்களில் கடந்த 2 நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் பூண்டி ஏரிக்கு விநாடிக்கு 200 கன அடி நீரும், புழல் ஏரிக்கு 313 கன அடி நீரும் வந்துகொண்டிருக்கிறது. அதே போல் செம்பரம்பாக்கம் ஏரியில் விநாடிக்கு 328 கன அடி நீரும், வீராணம் ஏரிக்கு 900 கன அடி நீரும் வருகிறது.

வடகிழக்கு பருவமழை தீவிரமடைய வாய்ப்புகள் உருவாகியுள்ளதால் வரும் நாள்களில் குடிநீர் ஏரிகளின் நீர்வரத்து மேலும் அதிகரிக்கும் என்று பொதுப்பணித்துறை அதிகாÔÕகள் தெரிவித்துள்ளனர்.

இதைத் தவிர கிருஷ்ணா நீர் வழித்தடமான உப்பளமதகு அருகே மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாய் அமைக்கும் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. இதனால் ஜனவரி மாதத்தில் இருந்து பூண்டி ஏரிக்கு கிருஷ்ணா நீர் வரத்து 1000 கன அடியாக அதிகரிக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. சென்னையின் குடிநீர் ஆதாரங்களின் தற்போதைய நீர் இருப்பு (கன அடியில்):

**வைகை அணை வனவியல் பயிற்சிக் கல்லூரியில் வனத் துறையினருக்கு துப்பாக்கிச் சுடும் பயிற்சி**

தேனி மாவட்டம், வைகை அணை வனவியல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் வனத் துறையினருக்கு, செவ்வாய்க்கிழமை துப்பாக்கிச் சுடும் பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழகத்தில் உள்ள வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர்களுக்குப் பயிற்சிக் கல்லூரி வைகை அணையில் அமைந்துள்ளது. இங்கு, பதவி உயர்வு மற்றும் நேரடியாகத் தேர்வு பெற்ற வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர்களுக்கு 6 மாதம் பயிற்சி வழங்கப்படுகிறது.

தற்போது, 94 ஆவது குழுவினருக்கு, கையேடுகள் கையாளுதல் மற்றும் வனத்தில் வனவிலங்குகள் நடமாட்டம் மற்றும் பல்வேறு பயிற்சிகளும், வனக் குற்றங்களைத் தடுத்தல் மற்றும் துப்பாக்கிச் சுடும் பயிற்சிகள் நடைபெற்றன. இதில் 115 வனக் காப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இது குறித்து, வனவியல் கல்லூரி முதல்வர் சேவாசிங் தெரிவிக்கையில், கடந்த 2 நாள்களாக துப்பாக்கிகளை பராமரிப்பது, கையாளுவது போன்ற பயிற்சி அளிக்கப்பட்டது. அதன் பின்னர், தேனி ஆயுதப்படை பிரிவு போலீஸார் உதவியுடன் துப்பாக்கிச் சுடும் பயிற்சி அளிக்கப்பட்டது. இது தவிர, மேகமலை வன உயிரின சரணலாயங்களுக்கு அழைத்துச் சென்று, களப் பயிற்சியும் அளிக்கப்பட உள்ளது என்றார்.

**தென்னமரங்களை பாதுகாக்க மத்திய அரசிடம் சிறப்பு நிதி கோரப்பட்டுள்ளது: அமைச்சர் ஷாம்னூர் சிவசங்கரப்பா**

தென்னமரங்களை பாதுகாக்க மத்திய அரசிடம் சிறப்பு நிதி கோரப்பட்டுள்ளது என்று கர்நாடக தோட்டக்கலை மற்றும் வேளாண் விளைபொருள் விற்பனைத்துறை அமைச்சர் ஷாம்னூர் சிவசங்கரப்பா தெரிவித்தார்.

பெல்காம் சட்டமேலவையில் செவ்வாய்க்கிழமை மஜத உறுப்பினர் சந்தேஷ்நாகராஜின் கேள்விக்கு அவர் அளித்த பதில்: மாநிலத்தில் பல பகுதிகளில் உள்ள தென்னை மரங்கள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் அதனை நம்பி இருக்கும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்காக ரூ. 585 கோடி

சிறப்பு நிதியை வழங்குமாறு மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத்பவாரையும் புதுதில்லியில் சந்தித்து மனு அளித்துள்ளோம். ஆனால் இதுவரை மாநிலத்திற்கு மத்திய அரசு எந்த நிதியையும் வழங்கவில்லை. மைசூர் மற்றும் சாம்ராஜ்நகரில் நோய்க்கு சுமார் 22 லட்சம் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதி விவசாயிகளுக்கு ரூ. 45 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதி வராதபோதும், மாநில அரசு இதுவரை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 60 கோடிவரை இழப்பீட்டு தொகை வழங்கியுள்ளது. கேரள மாநிலத்தின் மாதிரியில் இழப்பீட்டு தொகையை வழங்கவும் அரசு ஆலோசித்து வருகிறது. தென்னை மர நோயால் தேங்காயின் விலை 50 சதம் குறைந்துள்ளது என்றார் அவர்.

**ராமேசுவரத்தில் கனமழை**

ராமேசுவரம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை முதல் தொடர்ந்து இரண்டு நாள்களாக பலத்த காற்றுடன் கன மழை பெய்தது. திங்கள்கிழமை ராமேசுவரம், தங்கச்சிமடம், பாம்பன் ஆகிய பகுதிகளில் சராசரியாக 98.5 மில்லிமீட்டர் மழை பதிவானது. மழையால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு அடைந்துள்ளது. சாலைகளில் தண்ணீர் தேங்கியுள்ளதால் வாகனங்கள் ஊர்ந்து சென்றன.

**கோமாரி நோயினால் இறந்த கால்நடைகளுக்கு தலா ரூ.20,000 இழப்பீடு வழங்க வலியுறுத்தல்**

கோமாரி நோயினால் இறந்த கால்நடைகளுக்கு தலா ரூ.20,000 இழப்பீடு வழங்க வேண்டும் பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. மாவட்ட நிர்வாகிகள் கூட்டம், மாவட்டத் தலைவர் மதியழகன் தலைமையில் கடலூரில் அண்மையில் நடந்தது. கல்வி குழு உறுப்பினர் சண்முகம், ஆலோசகர் சுப்புராயலு, அன்புதுரை, செயலர் இளந்திரையன், பொருளாளர் முருகன், மாவட்ட இளைஞரணி தலைவர் அய்யப்பன், இணைச்செயலர் ரவி, பாண்டியன், முனுசாமி, பொறுப்பாளர் ராஜா, மாவட்டத் துணைத் தலைவர் சந்திரன், குமராட்சி ஒன்றிய செயலர் கனகசபை உள்பட பலர் பங்கேற்றனர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள். வரும் 16-ம் தேதி சேலத்தில் நடக்கும் மாநாட்டில் திரளாக பங்கேற்பது. கூட்டமைப்பின் மாநில தலைவர் பொன்குமாருக்கு நெய்வேலியில் பாராட்டு கூட்டம் நடத்துவது. சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக ராஜா முத்தைய மருத்துவக் கல்லூரியில் உயிர் காக்கும் மருந்துகள் இருப்பு வைக்க வேண்டும். கோமாரியால் இறந்த கால்நடைகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபாய் வழங்கவேண்டும்

**"கோமாரியால் இறந்த மாடுகளுக்கு இழப்பீடு தேவை**

கோமாரி நோய் தாக்கி இறந்த மாடுகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று கொட்டவாக்கம் கிராமத்தினர் மனு அளித்தனர்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை மக்கள் குறைதீர்வு கூட்டம் நடைபெற்றது. இதில் காஞ்சிபுரத்தை அடுத்த பரந்தூர் அருகே கொட்டவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த பெருமாள், ஏழுமலை, சரோஜா, காசி, ஆறுமுகம் உள்ளிட்டோர் மனு அளித்தனர். அதன் விவரம்: காஞ்சிபுரம் வட்டம், கொட்டவாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறோம். நாங்கள் வளர்த்து வந்த பசு, எருமை உள்ளிட்ட 10 மாடுகள் கோமாரி நோய் ஏற்பட்டு உயிரிழந்துள்ளது. எனவே உயிரிழந்த மாடுகளுக்கு அரசு வழங்கும் உதவித்தொகையை அளித்து உதவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்

**பெரம்பலூர் மாவட்டத்தில் பரவலாக மழை**

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக தொடர்ந்து சாரல் மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 1-ம் தேதி மாலை சுமார் 1 மணி நேரம் மழை பெய்தது. அதைத்தொடர்ந்து, மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரை பெரம்பலூர் - 17.5 மில்லி மீட்டர், தழுதாழை- 31 மில்லி மீட்டர், பாடாலூர் - 9 மில்லி மீட்டர், வெண்பாவூர்- 19 மில்லி மீட்டர், செட்டிக்குளம்- 9 மில்லி மீட்டர் என, 87.5 மில்லி மீட்டரும், சராசரியாக 17.5 மில்லி மீட்டர் மழை பெய்தது.

இன்றைய வேளாண் செய்திகள்

4.12.2013

விவசாய மலர்



**தென்னந்தோப்புகளில் தேங்கியுள்ள தண்ணீரை வடியுங்கள்**

பருவமழை அடைமழையாக மாறி, தென்னந்தோப்புகள் வெள்ளக்காடாகியுள்ளது. ஒரு வாரம் 10 நாட்களுக்கு மேல் தென்னந்தோப்புகளில் தண்ணீர் தேங்குமானால், தென்னை மர வேர்கள் அழுகி தென்னை சாக வாய்ப்புள்ளது.

தென்னை அதிக தண்ணீரையும் தாங்காது. அதிக வறட்சியையும் தாங்காத சாதுவான பயிர். அரை அடிஅகலம், அரை அடி ஆழம் உள்ள ஒரு வாய்க்கால் இரு தென்னை வரிசைக்கு நடுவில் எடுத்து பள்ளமான பகுதி நோக்கி வெட்டிவிட்டு உடனே தண்ணீர் வடிக்கவும்.

நட்ட தென்னம்பிள்ளைகளின் குழிகளில் தண்ணீர் தேங்கி நிற்குமானால் குழிக்குக்குழி ஒரு ஓரத்தில் அரை அடி ஆழம், அரை அடி அகலத்தில் ஒரு சிறிய வாய்க்கால் அமைத்து உபரி தண்ணீரை வடிக்கவும். மேல் மண் ஈரம் குறைந்து காய்ந்து, தென்னம்பிள்ளை வேர் விட்டுத் தழைக்கும். வடிகால் வசதி இல்லாவிட்டால் தண்ணீர் மட்டத்திலிருந்து அரை அடி உயரத்தில் மண் மேடு அமைத்து நட்ட பிள்ளையை எடுத்து நடவும். அது பிழைத்துவிடும். தண்ணீருக்குள்

தொடர்ந்து இருக்குமானால் அழுகி செத்துவிடும். எடுத்து நட்ட பிள்ளை வேர் விட்டு தழைத்து வளரும்.

தண்ணீரில் மூழ்கிய தென்னம்பிள்ளைகளின் குருத்துப் பகுதியில் வண்டல் படிந்திருக்கும். இந்த வண்டலில் கலந்துள்ள பூஞ்சாணம் மற்றும் பாக்டீரியாக்களினால் பூஞ்சாண வியாதிகள் தாக்கி குருத்து அழுகி தென்னம்பிள்ளைகள் சாக வாய்ப்புள்ளது.

வி.எஸ்.மிக்ஸ் பவுடர் 10 கிராம் எடுத்து 200 மிலி தண்ணீரில் கரைத்து நடுக்குருத்தில் ஊற்றவும். குருத்து பசுமை கொடுத்து வளரும்.

திருவையாறு தென்னை ஆராய்ச்சி மையம் தொலைபேசி எண்: 04362-260 363ல் தொடர்பு கொண்டு இலவச ஆலோசனை பெறலாம். இவ்வாறு தென்னை ஆராய்ச்சியாளர் டாக்டர் வா.செ.செல்வம் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

**சின்ன சின்ன செய்திகள்**

**குறுவைக்கேற்ற ஒப்பற்ற நெல்ரகம் கோ 51:** குறுகிய கால ரகமான இது 105 - 110 நாட்களில் விளைச்சலை தர வல்லது. இந்த ரகம் அளவான உயரத்துடன் அதிக தூர்கள் பிடித்து சாயாத தன்மைக்கொண்டது. பொதுவாக சாகுபடி செய்யப்பட்ட எல்லா இடங்களிலும் ஏடீடி 43 ரகத்தை விட சராசரியாக 10 சதம் அதிக விளைச்சல் கொடுத்துள்ளது. எக்டருக்கு சராசரியாக 6623 கிலோ நெல் விளைச்சல் கொடுத்துள்ளது.

திருவாரூர் மாவட்டம் மேலநத்தம் கிராமத்தைச் சேர்ந்த திரு.பி.சூரியமூர்த்தி 10 ஏக்கருக்கும் மேலாக கோ.31 ரகத்தை சாகுபடி செய்து ஏக்கருக்கு சராசரியாக 2800 கிலோ (43 மூட்டைகள்) விலைச்சல் எடுத்துள்ளன. பூச்சி நோய் தாக்குதல் குறைவாக இருப்பதாக உழவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். தற்சமயம் தஞ்சை மாவட்டம் வாண்டையார் இருப்பு கிராமத்தில் திருமதி. திலகம் உள்ளிட்ட பலர் டிராக்டரை கொண்டு விதைக்கும் கருவியின் மூலம் நேரடியாக புழுதி விதைப்பு செய்ததில் கோ.51 ரகத்தின் மூலம் அதிக விளைச்சல் எதிர்ப்பார்க்கின்றனர்.

இந்த ரகத்தினை அலசி சன்னமாக இருப்பதால் சந்தையில் அதிக விலை

கிடைத்ததாகவும் பெரும்பாலான விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (தகவல் : முனைவர் ச.இராபின், முனைவர் ஜெயபிரகாஷ், தமிழ்நாடு வேளாண் டைட்டல் கலைக்கழகம், நெல்துறை கோயம்புத்தூர் - 641 003, தொலைபேசி 0422 - 247 4967

**சிறுகீரை ரகம் பி.எல்.ஆர்.1:** கடலூர் மாவட்டம், பாலூரில் உள்ள த.வே.ப. கழகத்தின் காய்கறி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து உருவாக்கப்பட்டுள்ள சிறுகீரையில் முதல் ரகம் தான் பாலூர் 1 சிறுகீரை. இந்தக்கீரை வடகிழக்கு மண்டலத்தின் பருவநிலை, மண் தன்மைக்கு மிகவும் உகந்ததாக உள்ளது. பாலூர் 1 ரகத்தின் கீரை முழுவதும் பச்சை நிறமுடையது. எனவே அனைவராலும் அதிகம் விரும்பக்கூடியதாக உள்ளது. சந்தையில் நல்ல விலைக்கு விற்பனை செய்ய ஏதுவாகவும் இருக்கிறது. உயர்விளைச்சல் திறன் கொண்டது. ஒரு ஏக்கரில் 6 முதல் 9 டன்கள் வரை கீரை கிடைக்கும். 20 நாட்களுக்கு கீரை விளைச்சலுக்கு வரும். மிக குறுகிய காலத்தில் கீரையாக அறுவடை செய்யலாம். எல்லா பருவத்திற்கும் ஏற்றது. பலவகையான மண்வகை கலனும் பயிரிட ஏற்றது. மழைக்காலம் நீங்கலாக எல்லா மாதங்களிலும் பயிரிடலாம். சிறுகீரை பச்சடி, கடைசல் கூட்டுப் பொரியல் போன்ற பலவகையான சமையல்களுக்கும் ஏற்றது. நல்ல சுவையுடையது.

இக்கீரை இலையைத் தின்னும் புழு, சாறு உறிஞ்சும் பூச்சிகளை, வெள்ள துரு நோய் போன்றவற்றிற்கு மிதமான எதிர்ப்பு திறன் உடையது.

**சத்துக்களின் அளவு (100 கிராம் கீரையில்):**

அஸ்கார்பிக் அமிலம் - 12.5 மி.கி

நார்ச்சத்து - 2.11 கி

புரதம் - 1.91 கி

சுண்ணாம்பு சத்து - 0.26 கி

இரும்பு - 3.54 மி.கி

கரோட்டினாய்டு - 20.4 மி.கி

இந்த ரகத்தில் ஆக்ஸலேட் என்ற நச்சு பொருளின் அளவு குறைவாக உள்ளது. விதை உற்பத்தியை பொருத்தவரை 50-55 நாட்களில் விதை அறுவடைக்கு

தயாராகும். எக்டருக்கு 200 கிலோ விதை கிடைக்கும். விதைகளால் உற்பத்தி செய்து விற்பதால் உழவர்கள் அதிக லாபம் அடையலாம்.

விதைப்பதற்கு எக்கடருக்கு 3 கிலோ விதை தேவைப்படும். நிலத்தை 4 முறை உழ வேண்டும். விதைப்பதற்கு முன்பு சூடோமோனால் புளோரசனிஸ் 10 கிராம் (அ) கார்பண்டாசிம் 1 கிராம் மருந்தை 1 கிலோ விதையுடன் கலந்து 2மீ ஙீ 1.5 மீ பகுதியை அடைத்து அதில் விதைக்க வேண்டும்.

**தகவல்:** முனைவர் க.சக்திவேல், முனைவர் எம்.எஸ்.அனீசாராணி, முனைவர் க.தனலெட்சுமி, காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர் - 607 102 கடலூர் மாவட்டம். போன். 04142 -275 222

**அரிவாள்மனை பூண்டு**

அரிவாள்மனை பூண்டு சிடாஅக்யூட்டா என்ற தாவரவியல் பெயரில் மால்வேசி குடும்பத்தில் காணப்படும் மூலிகையாகும். இந்தியா மற்றும் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் கிடைக்கின்ற ஒரு களையாகும். இது சாலை ஓரங்களில் தென்னை தோப்புகளில் அதிகம் காணப்படும். 30செ.மீ. வரை வளரக் கூடியது. இத்தாவரத்திற்கான பருவம் அக்டோபர், நவம்பர் என்றாலும் ஆண்டு முழுவதும் கிடைக்கும்.

இதனுடைய இலைகள் கூர்மையாகவும், பற்போன்ற இலை அமைப்புடையது. இது வியாபார ரீதியாக பாலா என்று அழைக்கப்படுகிறது. அதிக கசப்புத்தன்மை கொண்டுள்ளதால் வயிற்றுப் போக்குக்கு முக்கிய மருந்தாகும். மேலும் நரம்பு மண்டலத்தின் சீரான செயல்பாட்டிற்கும், சிறுநீரக குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும், ஒழுங்கற்ற ரத்தபோக்கு போன்றவற்றுக்கும் பயன்படுகிறது.

பயன்படும் பகுதிகள்: இலை, தண்டுகள் இந்தியா மற்றும் ஆப்ரிக்காவின் பாரம்பரிய மருத்துவத்தில் இம்மூலிகை முக்கிய பங்காற்றுகிறது. நைஜீரியாவின் பாரம்பரிய வைத்தியத்தில் மலேரியா, கருக்கலைதல் முதலியவற்றுக்கு நிவாரணியாக பயன்படுத்துகின்றனர்.

சந்தை நிலவரம்: அரிவாள்மனை பூண்டு பாலா என்ற வியாபாரப் பெயரால் அழைக்கப்படுகிறது. இது தமிழகம் மற்றும் ஆந்திராவில் மூலிகை சேகரிப்போரால்

தரிசு நிலங்களிலும், விவசாய நிலங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டு காய வைத்து மூலிகை வியாபாரிகளிடம் விற்பனை செய்யப்படுகிறது.

தமிழகத்தில் மதுரை, விருதுநகர், திண்டுக்கல், வேலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டத்திலும், ஆந்திராவில் அனந்தப்பூர் மாவட்டத்திலும் அதிக அளவில் சேகரிக்கப்படுகிறது.

இந்தியாவில் கால்நடை மருந்துகள் மற்றும் மனித மருந்துகள் தயாரிக்கும் மூலிகை கம்பெனிகள் நிறைய அளவில் கொள்முதல் செய்கின்றன. விவசாயிகள் இதன் பலனை அறியாத காரணத்தால் இதனை களை நிர்வாகம் செய்ய அதிக அளவில் செலவு செய்கின்றன. இதனுடைய காய்ந்த முழு தாவரமானது ஒரு டன் ரூ.8,000 முதலும், இலைகள் மட்டும் கிலோ ரூ.50 வரையும் கொள்முதல் செய்யப்படுகிறது.

அறுவடை: அக்டோபர், நவம்பர் மாதங்களில் இத்தாவரம் இலைகள் நிறைந்து காணப்படும் இச்சமயத்தில் வேர் பாகம் தவிர்த்த மேல் பகுதியை அறுவடை செய்து தார்பாலின் கொண்டு காய வைக்க வேண்டும். விரைவாக காய துண்டாக வெட்டி காய வைக்கலாம். 3 நாள்கள் காய்ந்த பின் விற்பனைக்கு அனுப்பலாம்.

இதனுடைய உற்பத்தி விதைகள் மூலமே நடைபெறுகிறது.

காய்ந்த மூலிகையில் ஈரப்பதம் 8%க்கு மிகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். காய வைக்கும் முன் அதனுடன் கலந்துள்ள வேறு தாவரங்களை நீக்கி விடவேண்டும். சரியான பருவத்தில் அறுவடை செய்தால் மருந்துப் பொருளின் அளவு கணிசமாக காணப்படும். இலைகள் அதிகள் இருப்பது நல்லது. சந்தைக்கான தேவைகளின் அடிப்படையில் அறுவடை செய்வது நல்லது.

குறிப்பு : அரிவாள்மனை பூண்டு சார்ந்துள்ள மால்வேஸி குடும்பத்தில் காணப்படும் சிடா கார்டிபோலியா என்ற தாவரமும் கம்பெனிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. இது குறுந்தொட்டி என்று அழைக்கப்படுகிறது. இது மஞ்சள் நிறப் பூக்களுடன் சிறிய இலைகளைக் கொண்டு காணப்படும். இந்த இரண்டு தாவரங்களுக்கான வேறுபாட்டை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## தமிழகத்தில் பருவமழை தாமதம்: சன்னரக நெல் சாகுபடி பாதிப்பு

தேனி: பருவமழை தாமதத்தால், தமிழகம், ஆந்திரா, கர்நாடகாவில் சன்னரக நெல் சாகுபடி பாதித்துள்ளது.பொன்னி, கர்நாடகா பொன்னி, ஆடுதுறை- 45, ஜெ.சி.எல்., (சன்ன அரிசி ரகங்கள்) நெல் விளைச்சலுக்கு வர, 150 நாள் ஆகும்; தண்ணீர் அதிகம் தேவைப்படும். நெல்லுக்கு அதிக விலை கிடைக்கும். வழக்கமாக, அக்டோபர் துவக்கத்தில், சன்னரக நெல் நடவுப்பணி முடிந்து, பிப்ரவரியில் அறுவடை நடக்கும். தென் மேற்கு பருவமழை தாமதத்தால் தமிழகம், ஆந்திரா, கர்நாடகாவில், சன்னரக நெல் சாகுபடி பாதித்துள்ளது. வடகிழக்கு பருவமழையும் தாமதமாக துவங்கி உள்ளதால், அக்டோபரில் முடிந்திருக்க வேண்டிய நெல் நடவுப்பணி, இப்போது தான் துவங்கி உள்ளது. தஞ்சை பகுதியில், நேரடி நெல் விதைப்பு பணிகளும் பலன் தரவில்லை. இனிமேல்,சன்னரக நெல் சாகுபடி செய்தால், மார்ச்சில் அறுவடை நடக்கும்; அதுவரை தண்ணீர் இருக்காது. எனவே,பெரும்பாலான விவசாயிகள், ஆடுதுறை- 39, கோ- 43, ஏ.எஸ்.டி.,16, ஐ.ஆர்.,50, டி.ஆர்.,1009, ஆடுதுறை- 36 மோட்டா ரகங்களை நடவு செய்கின்றனர். இந்த ரகங்கள் 120 நாளில், அறுவடைக்கு வந்து விடும். எனவே, தற்போது நடவு செய்தாலும், ஜனவரி கடைசியில் அறுவடைக்கு வந்து விடும். இதனால் மோட்டா ரக நெல்லை, சாகுபடி செய்கின்றனர். இரண்டாம் போகத்திலும், சன்ன ரக நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

## ஆவின் நெய் தட்டுப்பாட்டுக்கு காரணம் என்ன

மதுரை: மதுரையில் ஆவின் நெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், பொதுமக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். மதுரை, தேனி மாவட்டங்களில் உள்ள 800க்கும் மேற்பட்ட கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் பால் சேகரித்து, ஆவின் நிறுவனம் பொதுமக்களுக்கு விற்பனை செய்கிறது. தற்போது ஆவின் நெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மார்க்கெட்டில் தனியார் நிறுவன நெய் கிலோவுக்கு ரூ. 350 முதல் 400 வரை விற்பனையாகிறது. அதேசமயம், ஆவின் நிறுவனத்தின் தரமான நெய் கிலோ ரூ. 290க்கு விற்கிறது. சமீபகாலமாக ஆவின் நெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், பொதுமக்கள் அதிருப்தியில் உள்ளனர்.

## தட்டுப்பாடு ஏன்?:

மதுரை, தேனி மாவட்டங்களில் தினமும் 1.80 லட்சம் லிட்டருக்கு மேல் பால் சேகரிக்கும் மதுரை ஆவின் நிறுவனத்திற்கு, ஆண்டுதோறும் அக்., நவ., டிச.,ல் பால் கொள்முதலில் பின்னடைவு ஏற்படும். தமிழகம் முழுவதுமே இந்நிலை இருப்பது வாடிக்கை. மதுரையில் இந்த ஆண்டு 10 ஆயிரம் லிட்டருக்கு மேல் குறைந்துள்ளது. இதனால், பால் உபபொருட்கள் தயாரிப்பும் குறைந்துள்ளது. உபரியாக பால் வரும்போது தான் உபபொருட்களை தயாரித்து,சேகரித்து வைப்பது வழக்கம். கடந்த ஆண்டுகளில் 20 முதல் 25 டன் பால் பொருட்கள் விற்பனையானது. தற்போது அது வெகுவாக 10 டன்னுக்கும் கீழாக குறைந்துவிட்டது. இதனால் பால் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மொத்தமாக யாரும் வாங்கி விற்கக்கூடாது என்பதற்காக அரை கிலோ, 200 கிராம் பாக்கெட்டாகவே விற்கப்படுகிறது. "நெய் தட்டுப்பாடு ஜனவரிக்குப் பின் சரியாகிவிடும்', என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தமிழகத்தில் 8.5 லட்சம் விவசாயிகளை "காணோம்'

திண்டுக்கல்:தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளில் 8.5 லட்சம் விவசாயிகள், உழவுத்தொழிலை விட்டு, வேறு தொழில்களுக்கு மாறியுள்ளது ஆய்வில் தெரியவந்துள்ளது. விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள், மானியங்களை நேரடியாக வழங்க, மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக, பயிர் மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இதில், விவசாயிகள் மற்றும் மண் மாதிரி விபரங்கள் சேகரிக்கப்பட்டு, ஆன்லைனில் பதிவு செய்யப்படுகிறது. தமிழகத்தில், விவசாய அதிகாரிகள் கிராமங்களில் ஆய்வு செய்து விவசாயிகள் பெயர், குடும்ப பின்னணி, நிலம், பட்டா எண் விபரங்களை சேகரித்து வருகின்றனர்.

ஆய்வில், ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு அதிகாரிகளிடம் உள்ள புள்ளிவிபரமும், ஆய்வில் சேகரிக்கப்பட்ட புள்ளிவிபரமும் மாறுபட்டிருந்தன.விசாரணையில், கடந்த 10 ஆண்டுகளில் மாநிலம் முழுவதும் 8.5 லட்சம் விவசாயிகள் விவசாயத்தை விட்டு, வேறு தொழில்களுக்கு மாறியிருப்பது தெரியவந்தது. மேலும், போதிய மழை இல்லாதது, விவசாய நிலங்களை "பிளாட்'களாக்கி விற்பது இதற்கு காரணமாக கண்டறியப்பட்டு உள்ளது. தவிர, கடந்த இரண்டு ஆண்டுகளாக, தமிழகத்தில் கடும் வறட்சி நிலவுவதால் சாகுபடி பரப்பும் வெகுவாக குறைந்து வருகிறது. இதனால் உணவு உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

**சம்பா சாகுபடி பாதிப்பு: அதிகாரிகள் ரகசிய ஆலோசனை!**

காவிரி டெல்டா மாவட்டங்களை தவிர்த்து, பல மாவட்டங்களில், சம்பா சாகுபடி பரப்பு இந்தாண்டு, மிகவும் குறைந்து உள்ளது. எனவே, உற்பத்தி இலக்கை எட்ட முடியாத சூழல் உருவாகியுள்ளது. இதனால், முதல்வருக்கு என்ன பதில் சொல்வது என, தெரியாமல், வேளாண்துறை உயர் அதிகாரிகள் கவலை அடைந்துள்ளனர். தமிழகத்தில், சொர்ணாவாரி, குறுவை, சம்பா, தாளடி, நவரை என, ஐந்து பருவங்களாக நெல் சாகுபடி செய்யப்படும். வடகிழக்கு பருவ மழையின் போது மேற்கொள்ளப்படும் சம்பா பருவத்தில் தான், மாநிலம் முழுவதும் அதிக பரப்பளவில் சாகுபடி நடக்கும். காவிரி டெல்டா மாவட்டங்களில், 12 லட்சம் ஏக்கர்; மற்ற மாவட்டங்களில், 25 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி நடப்பது வழக்கம். 'இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி இலக்கு, 112 லட்சம் டன்' என, அரசு நிர்ணயித்துள்ளது; இதில், அரிசி உற்பத்தி இலக்கு, 78.50 லட்சம் டன். சம்பா சாகுபடிக்காக, முக்கிய அணைகளில் இருந்து, ஜூலை மாதம் முதல், பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. இதன்பின், 'டெல்டா மாவட்டங்களில், 12 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி நடக்கும்' என, இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மற்ற மாவட்டங்களுக்கு சாகுபடி இலக்கு நிர்ணயிக்கவில்லை.

இதுகுறித்து, ஓய்வுப்பெற்ற வேளாண்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: கடந்த ஆண்டு வறட்சி ஏற்பட்ட நிலையில், வேளாண் துறையினரிடம் இருந்து தேவையான ஆலோசனை, ஒத்துழைப்பு, உதவி கிடைக்காததே, இந்த ஆண்டு சம்பா சாகுபடி பரப்பு குறைந்ததற்கு முக்கிய காரணம். வேளாண் துறையில், முதல்வர் ஜெயலலிதா செலுத்தும் ஆர்வத்தில், 50 சதவீத அளவிற்கு கூட, துறை உயர் அதிகாரிகள் காட்டவில்லை. சாகுபடி பரப்பு குறைந்துள்ளதால், உற்பத்தி இலக்கு பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது. 'மழை போதுமான அளவில் இல்லை; எனவே, சாகுபடி நடக்கவில்லை' எனக்கூறி, முதல்வரை சமாளித்து விடலாம் என, அதிகாரிகள் கணக்கு போடுகின்றனர். இது தொடர்பாக, சமீபத்தில், தலைமை செயலகத்தில் ரகசிய ஆலோசனையும் நடத்தி உள்ளனர். ஆனால், முதல்வரின் உத்தரவு படி, திறக்கப்பட்ட அணைகளை ஒட்டிய பகுதிகளிலும், சம்பா சாகுபடி எதிர்பார்த்த அளவிற்கு நடக்காதது, அதிகாரிகளின் மெத்தனத்தை வெளிச்சம் போட்டு காட்டி விடும். எனவே, என்ன செய்வது என, தெரியாமல், வேளாண்துறை உயர் அதிகாரிகள் கவலை அடைந்துள்ளனர். இவ்வாறு, அவர் கூறினார்.

## தாமிரபரணியில் வெள்ளப்பெருக்கு

திருநெல்வேலி: நெல்லையில் பெய்த தொடர்மழையினால், தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழைபெய்து வருகிறது. நேற்று காலை வரையிலும், மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த மழையால், நேற்றுமுன்தினம் 95 அடியாக இருந்த பாபநாசம் அணையின் நீர்மட்டம், நேற்றுகாலை 97 அடியாக உயர்ந்தது. 70 அடியாக இருந்த மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் ஒரு அடி உயர்ந்தது. 104 அடியாக இருந்த சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 108 அடியாக உயர்ந்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக பாபநாசம் கீழ்அணைப்பகுதியில் 140 மி.மீ.,மழை பதிவாகியது. தாமிரபரணி ஆற்றில் வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதனால் ஆற்றில் வெள்ளப்பெருக்கு

ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, திருநெல்வேலியை அடுத்த குறுக்குத்துறை முருகன் கோயிலை சூழ்ந்து தண்ணீர் செல்கிறது. தாமிரபரணி ஆற்றின் முழுவதும் நிறைத்தபடி தண்ணீர் செல்கிறது. இருப்பினும், பாதிப்பு எதுவும் இல்லை.

## பொள்ளாச்சி மாட்டு சந்தை "வெறிச்': கோடிக்கணக்கில் வர்த்தகம் பாதிப்பு

பொள்ளாச்சி: கோமாரி நோய் பீதியால், மாட்டு சந்தைகள் இயங்க, தடை விதிக்கப்பட்டுள்ளதால், பொள்ளாச்சி மாட்டுச்சந்தை, நேற்று வெறிச்சோடியது. தமிழகத்தில், பொள்ளாச்சி மாட்டுச்சந்தை மிகவும் பிரபலம். வாரந்தோறும், செவ்வாய் மற்றும் வியாழக் கிழமைகளில், இங்கு மாட்டுச்சந்தை கூடும். ஆந்திரா, கர்நாடகா உட்பட, வெளி மாநிலங்களில் இருந்தும், தஞ்சாவூர், கும்பகோணம், ஒட்டன்சத்திரம் உட்பட, பல ஊர்களில் இருந்தும், காங்கயம் காளைகள், ஜெர்சி மாடுகள், எருமை மாடுகள் உட்பட, பல விதமான மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்படும். வழக்கமாக, செவ்வாய் கிழமை சந்தைக்கு, 4,000த்துக்கும் மேற்பட்ட மாடுகளும், வியாழக்கிழமை சந்தைக்கு, 2,000த்துக்கும் மேற்பட்ட மாடுகளும் வரும். இந்தச் சந்தையில், ஒவ்வொரு வாரமும், 10 கோடிக்கு மேல் வர்த்தகம் நடக்கும். இந்நிலையில், கடந்த மாதத்தில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கியதால், மாநிலத்திலுள்ள மாட்டுச்சந்தைகள் செயல்பட தடை விதிக்கப்பட்டது. இதனால், பொள்ளாச்சி மாட்டுச் சந்தை நேற்று வெறிச்சோடியது. நேற்று மட்டுமின்றி, மூன்று வாரங்களாக, பொள்ளாச்சி மாட்டுச் சந்தையில், குறைவான மாடுகளே விற்பனைக்கு வருவதால், கோடிக்கணக்கிலான வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாட்டு வியாபாரிகள் சங்க பொருளாளர் செல்வராஜ் கூறுகையில், ""மாட்டுச்சந்தை மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி, மீண்டும் செயல்பட தமிழக அரசு விரைவில் அனுமதி அளிக்க வேண்டும்," என்றார்.

## போக்கு காட்டும் புயல் சின்னம்: தமிழகத்திற்கு மழை உண்டா?

சென்னை: 'தென் மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள, தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி, அப்பகுதியிலேயே நீடிப்பதால், தமிழக கடலோர மாவட்டங்களில், அனேக இடங்களில் மழை பெய்யக் கூடும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துளளது.

தென் கிழக்கு வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, தீவிரமடைந்து, தென் மேற்கு வங்கக்கடல் பகுதிக்கு, நேற்று முன்தினம் இடம் பெயர்ந்தது. இந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதியானது, நேற்று மாலை நிலவரப்படி அதே இடத்தில் நீடிக்கிறது. இதனுடன், அந்தமான் அருகில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதியும் இணைந்துள்ளதால், அடுத்த, 24 மணி நேரத்தில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக அதாவது, புயல் சின்னமாக மாற வாய்ப்புள்ளது. இதன் காரணமாக, தொடர்ந்து தமிழகத்தில் மழை பெய்து வருகிறது. இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது: தென் மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதியானது, அதே பகுதியில் நீடிப்பதால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. தீவிர காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த, 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி, வடக்கு நோக்கி நகர வாய்ப்புள்ளது. இதனால், கடல் கொந்தளிப்பாக இருக்கும். எனவே. தமிழக மீனவர்கள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். அடுத்த, 24 மணி நேரத்தை பொறுத்தவரை, கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களிலும், உள்மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், மழையை எதிர்பார்க்கலாம். சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; ஒரு சில இடங்களில் மழை பெய்யும். கடந்த, 24 மணி நேரத்தில், தங்கச்சிமடத்தில் அதிகபட்சமாக, 16 செ.மீ., குடவாசல், சிதம்பரம், 12, ராமேஸ்வரம், நன்னிலம், பாம்பன், பாபநாசத்தில், 10 செ.மீ., சென்னை, 6 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

வங்கக்கடலில் ஏற்கனவே உருவாகிய, "பைலின்', "ஹெலன்' மற்றும்," லெஹர்' புயல்கள், தமிழகத்தின் பக்கம் திரும்பாமல், போக்கு காட்டி, ஆந்திரா பக்கம் சென்று விட்டன. தற்போது, வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதி, தாழ்வு மண்டலமாக மாறி தொடர்ந்து, வலுப்பெற வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இது, வங்கக்கடலில் பகுதியில் தொடர்ந்து இன்னும் சில நாட்களுக்கு நிலை கொண்டிருக்கும் பட்சத்தில், தமிழகத்தில் மழை எதிர்பார்க்கலாம் என கூறப்படுகிறது. சென்னையை பொறுத்தவரை, நேற்று முன்தினம் காலை மழை பெய்தது; இரவு, கிண்டி, வேளச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தது. நேற்று காலை, புறநகர் பகுதிகளில், பூந்தமல்லி உள்ளிட்ட சில இடங்களில், கடும் பனி மூட்டம் நிலவியது. மார்கழி மாதத்திற்கு, இன்னும், 10 நாட்களுக்கு மேல் இருக்கும் நிலையில், தற்போதே பனிப்பொழிவு நிலவி வருவது, மழையை தடுத்துவிடுமோ என்ற அச்சம் மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

## 27 சதவீதம் பற்றாக்குறை:

தமிழகத்தை பொறுத்தவரை, நேற்று நிலவரப்படி, இயல்பளவை விட, 27 சதவீதம் மழை பற்றாக்குறையாக உள்ளது. மாவட்டங்களை பொறுத்தவரை, தர்மபுரியில் இயல்பளவை விட, 8 சதவீதம் அதிகமாகவும், நெல்லையில் இயல்பளவிலும் மழை கிடைத்துள்ளது. இயல்பளவை காட்டிலும், திண்டுக்கல், 49, திருப்பூர் மற்றும் புதுக்கோட்டையில், 46, காஞ்சிபுரம், 45, திருவாரூர், 44 சதவீதம் மழை குறைவாக பதிவாகியுள்ளது. வடகிழக்கு பருவமழை சீசன் முடிய, இன்னும், 29 நாட்கள் மீதமுள்ள நிலையில், இறுதி காலகட்டத்தில் அதிகளவு மழை எதிர்பார்க்கலாம் என கூறப்படுகிறது.

**கோமாரி நோய் தாக்கம்ஐந்து குழு நியமனம்**

வாலாஜாபாத்: கொட்டவாக்கம் கிராமத்தில், கோமாரி நோய் தாக்குதலை தொடர்ந்து, இருவர் கொண்ட ஐந்து மருத்துவ குழுவினரை, கால்நடை துறை நிர்வாகம் நியமனம் செய்து உள்ளது.காஞ்சிபுரம் அடுத்த, புள்ளலூர், கொட்டவாக்கம் ஆகிய பகுதிகளில், கோமாரி நோய் தாக்குதலால், பசு மற்றும்

எருமை மாடுகள் இறந்து உள்ளன. இதைதொடர்ந்து, ஒரு கால்நடை மருத்துவர், ஒரு கால்நடை உதவியாளர் கொண்ட, ஐந்து மருத்துவக் குழுவினர், நோய் தடுப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**தொடர் மழையால் 97 அடியை எட்டிய பாபநாசம் அணை மூடப்பட்டது**

விக்கிரமசிங்கபுரம்: நெல்லை மாவட்டத்தில் பெய்து வரும் புயல் மழையின் காரணமாக பாபநாசம் அணை நேற்று முன்தினம் மூடப்பட்டது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலையில் நெல்லை மாவட்டத்தில் கடந்த சுமார் இரண்டு நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயப் பணிகளுக்கு தேவையான தண்ணீர் பெருமளவு தேவைப்படாத நிலையில் பாபநாசம் அணை நேற்று முன்தினம் இரவு மூடப்பட்டது. நேற்று முன்தினம் விக்கிரமசிங்கபுரம், பாபநாசம், சேர்வலாறு, காரையார் பகுதிகளில் தொடர் மழை பெய்தது. காரையார் மேற்கு தொடர்ச்சி மலை வனப்பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக அணையின் நீர் பிடிப்பு பகுதிகளிலிருந்து பாபநாசம் அணைக்கு அதிக அளவில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.இதனால் நேற்று முன்தினம் 95.50 அடியாக இருந்த பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று சுமார் 2 அடி அதிகரித்து காலை நிலவரப்படி 97.25 அடியானது. அணைக்கு விநாடிக்கு 2203.59 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணை பகுதியில் 98 மி.மீ., பாபநாசம் கீழ் அணையில் 140 மி.மீ., சேர்வலாரில் 64 மி.மீ., மணிமுத்தாரில் 67.2 மி.மீ., கல்லிடைக்குறிச்சியில் 72 மி.மீ., என்ற அளவில் மழையின் அளவு பதிவாகியுள்ளது. நேற்று சேர்வலார் அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினத்தை விட சுமார் 4 அடி அதிகரித்து 108.14 அடியானது. நேற்று மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 1020 கனஅடி நீர் வந்தது. அணையின் நீர்மட்டம் 71.70 அடியானது. பாபநாசம் அணை பகுதியில் நேற்று மேக மூட்டம் காணப்பட்டதால் அணை பகுதியில் மழை பெய்யும் நிலை இருந்தது. ஏற்கனவே பெய்த மழையால் அணைகளின் நீர் பிடிப்பு பகுதிகளிலிருந்து அணைக்கு தண்ணீர் வந்து கொண்டிருப்பதால் பாபநாசம் அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கடல் சீற்றத்தால் மீனவர் முடக்கம்**

வேதாரண்யம்: வேதாரண்யம் கடற்பகுதியில் கடல் சீற்றமாக உள்ளதால் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த, 5,000 மீனவர்கள், இரண்டு நாட்களாக மீன்பிடிக்கச் செல்லாமல் வீடுகளில் முடங்கியுள்ளனர். வங்காள விரிகுடா கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவடைந்துள்ளதால், கடல் கொந்தளிப்பு, சீற்றம் காணப்படுகிறது. இதையடுத்து, "மறு அறிவிப்பு வரும் வரை, மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம்' என, வேதாரண்யம் மீன்வளத்துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளார்.இதனால், ஆறுகாட்டுத்துறை, கோடியக்கரை, புஷ்பவனம், வெள்ளப்பள்ளம் உள்பட பத்துக்கும் மேற்பட்ட மீனவ கிராமத்தில் உள்ள, 5,000 மீனவர்கள், இரண்டு நாட்களாக வீட்டில் முடங்கிக் கிடக்கின்றனர்.இவர்களுடைய, 800க்கும் மேற்பட்ட பைஃபர் படகு, 70 விசைப்படகு ஆகியவற்றை அந்தந்த பகுதியிலுள்ள கடற்கரை ஓரங்கள், ஆற்றுப்பகுதியிலும் பத்திரமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**மாறிய மழை: காபி விளைச்சல் பாதிப்பு**

பந்தலூர் : பந்தலூர் சுற்றுவட்டார பகுதிகளில் தலைகாட்டும் மழையால் காபி அறுவடைக்கு முன்னரே, பூக்கள் வர துவங்கி உள்ளன.நீலகிரியில் பந்தலூர் சுற்றுப்புற பகுதிகளில் அரபிக்கா, ரொபஸ்டா வகை காபி விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், தற்போது காபி பழம் அறுவடை சீசனாக உள்ளது. அவ்வப்போது தலைகாட்டும் மழை மற்றும் வெயிலால் காபி செடிகளில் காய்கள் பழுக்க துவங்கி, பூக்கள் பூத்துள்ளன. காபி பழங்களை பறிக்கும்போது, பூக்கள் விழும் நிலையில், அதன் மூலம் விளைச்சல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், பூக்களை விட்டு பழங்களை பறிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். "காலம் மாறிபெய்யும் மழையால், காபி அறுவடைக்கு மட்டுமின்றி, உலர வைப்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது' என, விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

**தொடர் மழையால் சோளம் விளைச்சல் திருப்தி**

கிருஷ்ணகிரி: தொடர் மழை காரணமாக, மானாவாரிய சாகுபடி செய்யப்பட்டுள்ள சோளம் நன்கு வளர்ந்துள்ளதால், கால்நடை வளர்க்கும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்

"சொர்கம் பைகோலர்' என்ற தாவரவியல் பெயரில் அழைக்கப்படும், சோளம் தமிழகத்தில், கடலோர மாவட்டங்களை தவிர மற்ற மாவட்டங்களில் பரவலாக பயிர் செய்யப்படுகிறது. வகங்கை, வேலூர், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக பரப்பில் சோளம் சாகுபடி செய்யப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், சிறு தானிய பயிர்கள், 73 ஆயிரம் ஹெக்டேரிலும், பயறு வகை பயிர்கள், 55 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் சிறுதானிய பயிர்களில் கேழ்வரகு, 57 ஆயிரம் ஹெக்டேரிலும் இதற்கு அடுத்தப்படியாக சோளம், 8,000 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நெல்லுக்கு மாற்று பயிராக சோளம் சாகுபடி செய்யப்படுகிறது. கிராம புறங்களில் உள்ளவர்கள் சோளத்தை முக்கிய உணவாக பயன்படுத்தப்படுத்தி வருகின்றனர்.

சோளத்தில் "கார்போஹைட்ரேட்' அதிகம் உள்ளதால் உடலுக்கு ஆரோக்கியம் தரும் உணவாகவும் சோளம் விளங்குகிறது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஜூன், ஜூலை மாதங்களில் மழை பெய்யும் போது மானாவாரியாக சோளத்தை சாகுபடி செய்து வருகின்றனர். மாவட்டத்தில் ஜெகதேவி, பர்கூர், பாலிநாயனப்பள்ளி, வேப்பனப்பள்ளி, போச்சம்பள்ளி, ராயக்கோட்டை, மத்தூர், ஊத்தங்கரை ஆகிய பகுதிகளில் சோளம் பரவலாக பயிர் செய்யப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் பெய்த மழையின் போது, விவசாயிகள் சோளத்தை விதைத்தனர். ஜூன் மாதத்தில் இருந்து, அவ்வப்போது தொடர் மழை பெய்தாதல், தற்போது சோளம் நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயாராக உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக அளவில் கிராம புறங்களில் மாடுகள் வளர்க்கப்படுகிறது. கால்நடை தீவனங்களின் கடுமையான விலையேற்றத்தால், அவற்றை வாங்க முடியாத விவசாயிகள் மாடுகளுக்கு, மாற்று தீவனமாக சோளத்

தட்டுகளை பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், சோளப்பயிர்கள் நன்றாக வளர்ந்துள்ளதால், கால்நடைகளுக்கு தீவன பற்றாகுறை ஏற்பாடாது என்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மாடுகளுக்கு கோமாரி: பொதுமக்கள் கவலை**

திருவெண்ணெய்நல்லூர்: திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் மாடுகளுக்கு கோமாரிநோய் தாக்கியுள்ளதால் பொதுமக்கள் கவலையடைந்துள்ளனர்.திருவெண்ணெய்நல்லூர் அடுத்த பெரியசெவலையை சேர்ந்தவர் முத்துவேல் (32). இவரது வீட்டில் ஐந்துக்கும் மேற்பட்ட மாடுகளை வளர்த்து வருகிறார். இந்த மாடுகளுக்கு கடந்த ஒரு வாரமாக கோமாரி நோய் தாக்கியுள்ளது. இதனால் மாடு வளர்ப்போர் கவலையடைந்துள்ளனர். மாடுகளை மருத்துவ மனைக்கு ஓட்டிச்செல்ல முடியாமல் டாக்டரை வரவழைத்து சிகிச்சையளிக்கின்றனர். இருப்பினும் குணப்படுத்த முடியவில்லை. இதேப் போல் பல மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்கியுள்ளது.காந்திக்குப்பத்தில் செல்வராசு என்பவரின் வீட்டில் வளர்த்து வந்த கன்றுகுட்டி நேற்று முன் தினம் காலை கோமாரி நோயினால் இறந்தது.அரசு சார்பில் சிறப்பு முகாம் அமைத்து கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதன் மூலம் மாடுகள் இறப்பதை தடுக்கலாம்.

**வேளாண் உபகரணங்கள் "வீண்'**

கண்டமங்கலம்: செயல்படாமல் மூடப்பட்ட வேளாண் கூட்டுறவு பொறியியல் மற்றும் சேவை சங்கங்களுக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்புடைய டிராக்டர், டிரெய்லர் உள்ளிட்ட வேளாண் உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் வீணாகிறது.

தமிழகத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு, மாவட்டம் தோறும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு வேளாண் பொறியியல் கூட்டுறவு மற்றும் சேவை சங்கம் (அக்ரோ சர்வீஸ் சென்டர்) துவக்கினர். மாவட்டத்தில் மொத்தம் 22 சங்கங்கள் செயல்பட்டன. போதிய நிர்வாகமின்றி தமிழகம் முழுவதும் பல வேளாண் பொறியியல் கூட்டுறவு மற்றும் சேவை சங்கங்கள் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கின. இதையடுத்து நஷ்டத்தில் செயல்பட்ட சங்கங்கள் கடந்த தி.மு.க., ஆட்சியின் போது கலைக்கப்பட்டு, அலுவலகங்கள் மூடப்பட்டன. மாவட்டத்தில்

விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், திருக்கோவிலூர், திருநாவலூர் சங்கங்கள் சிறப்பாக செயல்படுகின்றன. மற்றவை மூடப்பட்டன. கண்டமங்கலத்தில் மூடப்பட்ட சங்கத்திற்குச் சொந்தமான டிராக்டர், டெய்லர், பவர் டிரில்லர், உழவு இயந்திரங்கள் உள்ளிட்ட வேளாண் உபகரணங்கள் அங்குள்ள வேளாண் உதவி இயக்குனர் அலுவலக வளாகத்தில் நிறுத்தப்பட்டு கடந்த கடந்த 4 ஆண்டுகளாக பாழாகி வருகிறது.தமிழக அரசு கொள்கை முடிவெடுத்து மூடப்பட்ட சங்கங்களை மீண்டும் செயல்படுத்த வேண்டும்.

**கால்நடைகள் விற்பனை வார சந்தையில் மந்தம்**

மூங்கில்துறைப்பட்டு: மூங்கில்துறைப்பட்டில் நடந்த வாரச்சந்தையில் கால்நடை விற்பனை மந்தமாக நடந்தது.மூங்கில்துறைப்பட்டில் திங்கள் கிழமை கால்நடை வாரசந்தை நடக்கிறது. தற்போது தமிழகம் முழுவதும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவி வருவதால் விவசாயிகளும்,வியாபாரிகளும் கால்நடைகளை வாங்க வரவில்லை. இதனால் நேற்று முன் தினம் நடந்த சந்தையில் கால்நடை விற்பனை மந்தமாக நடந்தது.

**ரோஜா விற்பனை ஜோர்**

சின்னசேலம்: சின்னசேலத்தில் பூ மற்றும் பழம் வகையான செடிகள் விற்பனை ஜோராக நடந்து வருகிறது.சின்னசேலம் அருகே கனியாமூரில் வியாபாரிகள் ராஜ் மற்றும் ரவி ஆகியோர் ரோஜா, சாமந்தி, ஜாதிமல்லி உள்ளிட்ட பூ செடிகளும், ஆப்பிள், ஆரஞ்ச், எலுமிச்சை செடிகளை விற்பனை செய்து வருகின்றனர். சின்னசேலம் பகுதிகளில் சில தினங்களாக மழை பெய்வதால் விவசாயிகள் மற்றும் பெண்கள் வீடு , வயல்களில் செடிகள் வளர்க்க ஆர்வம் காட்டி வருகின்றனர். அதிகளவில் பொது மக்கள் செடிகளை வாங்கிச் செல்கின்றனர். ரோஜா செடிகள் ரூ 80 முதல் 140 க்கும், சாமந்தி ரூ 60க்கும், பழச் செடிகள் ரூ 250 க்கும் விற்பனை செய்கின்றனர்.வாடிக்கையாளர்களுக்கு எப்படி செடியை வளர்ப்பது, எந்த உரங்களை பயன்படுத்துவது குறித்தும் விளக்குகின்றனர்.

**கோமாரி நோய் தாக்கம்ஐந்து குழு நியமனம்**

வாலாஜாபாத்:கொட்டவாக்கம் கிராமத்தில், கோமாரி நோய் தாக்குதலை தொடர்ந்து, இருவர் கொண்ட ஐந்து மருத்துவ குழுவினரை, கால்நடை துறை நிர்வாகம் நியமனம் செய்து உள்ளது.காஞ்சிபுரம் அடுத்த, புள்ளலூார், கொட்டவாக்கம் ஆகிய பகுதிகளில், கோமாரி நோய் தாக்குதலால், பசு மற்றும் எருமை மாடுகள் இறந்து உள்ளன. இதைதொடர்ந்து, ஒரு கால்நடை மருத்துவர், ஒரு கால்நடை உதவியாளர் கொண்ட, ஐந்து மருத்துவக் குழுவினர், நோய் தடுப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**4.12.2013**

**யானைகளால் சேதமான பகுதியை எம்எல்ஏ பார்வையிட்டார்**

வால்பாறை,: யானைகள் உடைத்த பகுதியில் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் அதிகாரிகளுடன் கூட்டு ஆய்வு நடத்தினார்.

வால்பாறை பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் நீடித்து வருகிறது. சத்துணவு கூடங்கள், ரேசன்கடைகள், வீடுகளின் சமையல் அறைகள் தொடர்ந்து யானைகளால் உடைக்கப்பட்டு பொருட்கள் வீணடிக்கப்படுகிறது. இந்நிலை தொடர்வதால் வால்பாறை பகுதியில் உள்ள் எஸ்டேட்களில் தொடர் பீதி நிலவுகிறது. மாலையில் உலவும் சிறுத்தைகள், நள்ளிரவு வீட்டை உடைக்கும் யானைகளால் மக்கள் பயந்து காணப்படுகின்றனர்.

இந்நிலையில் நேற்று மாலை பெரியகல்லார் பகுதியில் சிறுத்தைகள் சர்வசாதாரணமாக குடியிருப்பு

பகுதியில் கோழிகளை வேட்டையாடி உள்ளது. ஏற்கனவே பெரியகல்லார்

பகுதியில் தொடர்ந்து யானைகள் முகாமிட்டுள்ள நிலையில் சிறுத்தைகள் உலவுவது அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்கையை பாதிப்படைய செய்துள்ளது. இது குறித்து அப்பகுதி கவுன்சிலர் 3தாகர் கூறுகையில், வனத்துறையினர் குடியிருப்பு பகுதியில் உலவும் சிறுத்தைகளை கூண்டு வைத்து பிடிக்க வனத்துறை நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று மாலை கவர்கல் எஸ்டேட் தோட்ட தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் முகாமிட்டு இருந்ததால் அப்பகுதி வாழ் மக்கள்அச்சத்தில் இருந்தனர்.

இந்நிலையில் வால்பாறை வந்த சட்டமன்ற உறுப்பினர் ஆறுமுகம், நகராட்சித் தலைவிசத்தியவாணிமுத்து, ஆணையாளர் வெங்கடாச்சலம் ஆகியோர் யானைகள் துளையிட்டு ரேசன் பொருள்களை சாப்பிட்ட உருளிக்கல் ரேசன்கடையை பார்வையிட்டனர். மற்றும் வால்பாறை குடியிருப்பு பகுதிகளில் யானைகள் ஊடுருவியது எப்படி எனவும் ஆய்வு நடத்தப்பட்டது. யானைகளால் ஏற்படும் விளைவுகள் குறித்து வரும் சட்டமன்ற கூட்டுத்தொடரில் விவாதிக்க முடிவெடுத்துள்ளதாக எம்எல்ஏ ஆறுமுகம்தெரிவித்தார்.

**மரம் வளர்க்க பள்ளிகளுக்கு நிதி**

மதுரை, : மதுரை மாவட்டத்தின் 400க்கும் அதிக அரசு, தனியார் பள்ளிகளில் மரம் வளர்க்க பசுமைப்படை திட்டத்தின் கீழ் தலா ரூ.2 ஆயிரத்து 500 நிதி வழங்கப்பட்டுள்ளது.மதுரை மாவட்ட பள்ளிகளில் மரங்கள் வளர்க்கவும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, பாலித்தீன் ஒழிப்பு பணிகளுக்கெனவும் பசுமைப்படை செயல்பட்டு வருகிறது.

இப்பணிக்கென மாவட்டத்தின் 400க்கும் அதிக அரசு, தனியார் பள்ளிகளுக்கு நேற்று தலா ரூ.2 ஆயிரத்து 500 நிதியை பள்ளிக் கல்வித்துறை ஒதுக்கி வழங்கியுள்ளது.

**1 லட்சம் ஏக்கர் பாசனத்திற்கு வைகை அணை மீண்டும் திறப்பு**

துரை, : வைகை அணையில் இருந்து ஒரு லட்சம் ஏக்கர் பாசனத்திற்கு நேற்று முதல் மீண்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

பெரியாறு அணை ஒருபோக ஆயக்கட்டில் ஒரு லட்சம் ஏக்கரில் நெல் நடவு பணிகள் முடிந்து, தற்போது பயிராக உள்ளது. அணையில் தண்ணீர் குறைவாக இருப்பதால் முறை வைத்து தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. 10 நாட்களாக மூடி இருந்த வைகை அணையில் இருந்து நேற்று காலை 6 மணி முதல் பாசனத்திற்கு மீண்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. வினாடிக்கு 1,660 கன அடி திறக்கப்படுகிறது.

நேற்றைய நிலவரப்படி பெரியாறு அணையில் 118.90 அடி உள்ளது. 387 கன அடி நீர் வருகிறது. வைகையில் 46.78 அடி உள்ளது. 318 கன அடி நீர் மட்டுமே வருகிறது. தொடர்ந்து 4 நாட்கள் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. மழை நிலவரம், அணைக்கு தண்ணீர் வரத்தை பொறுத்து அடுத்த முறை அணை திறப்பது குறித்து முடிவு செய்யப்படும் என பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் நேற்றும் பரவலாக மழை பெய்தது.

**கோதுமை வரத்தால் விலை குறைகிறது**



புதுடெல்லி: மொத்த விலை சந்தைக்கு கோதுமை வரத்து அதிகரித்துள்ளது. மேலும் வாங்குவதை மாவு மில்கள் குறைத்துள்ளதால், கோதுமை விலை குறையத் தொடங்கியுள்ளது. குவிண்டாலுக்கு ரூ.5 விலை குறைந்துள்ளது. ஆனால், மற்ற தானியங்களின் விலை அதேநிலையில் நீடிக்கிறது. இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது: கோதுமை வரத்து அதிகரித்துள்ளது. மாவு மில்கள் அரவைக்கு வாங்கும் அளவும் குறைந்துள்ளது. இதனால், கோதுமை விலை குறையத் தொடங்கியுள்ளது.தலைநகர் டெல்லியில் மாவு மில்களுக்கு சப்ளை செய்யப்படும் கோதுமை விலையில் குவிண்டாலுக்கு ரூ.5 குறைந்து உள்ளது. ரூ.1,595ல் இருந்து ரூ.1,590க்கு சப்ளை செய்ப்படுகிறது. கோதுமை வினியோகத்தில் 90 கிலோ ரூ.1,6051,610க்கு விற்கப்படுகிறது.

**ஒடிசா புயல் நிவாரணத்துக்கு தயாநிதி மாறன் ரூ.50 லட்சம்**

சென்னை: ஒடிசாவில் ஏற்பட்ட புயல் வெள்ள சேத நிவாரணப் பணிகளுக்காக ரூ.50 லட்சத்தை தயாநிதி மாறன் எம்.பி. தந்துள்ளார். தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இந்த நிதியை அவர் வழங்கியுள்ளார். இதற்கான கடிதத்தை தயாநிதி மாறன் நாடாளுமன்ற குழுவிற்கு அனுப்பினார். உத்ராஞ்சல் மாநிலத்தில் சில மாதங்களுக்கு முன் பேய் மழை வெள்ளத்தால் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். ஏராளமான கட்டிடங்கள், புராதன சின்னங்கள், கோயில்கள் தரைமட்டமாயின. அங்கு நடந்த நிவாரணப் பணிகளுக்கு தயாநிதி மாறன் ஏற்கனவே ரூ.50 லட்சத்தை தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கினார்.

**டெல்டா மாவட்டங்களில் கனமழை**

நாகை: வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. காவிரி டெல்டா மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் முதல் பலத்த மழை கொட்டுகிறது. நாகை, மயிலாடுதுறை, சீர்காழி, கொள்ளிடம், குடவாசல், நன்னிலம் பகுதிகளில் விடிய விடிய மழை பெய்தது. இதனால் விவ சாயிகள் மகிழ்ச்சியடைந்த னர். நாகை,

திருச்சி உட்பட பல்வேறு இடங்களில்அவ்வப்போது லேசான தூறல் விழுந்தது. நாகையில் கொள்ளிடம் அருகே உள்ள பழையாறு மீன்பிடி துறைமுக வளாகத்தில் மழை நீர்¬ சூழ்ந்தது. இதனால் கருவாடு உலரவைக்கும் பணி பாதித்தது.
அதேபோல் பழையாறு சுனாமி குடி யிருப்பை மழைநீர் சூழ்ந்தது. மயிலாடுதுறை அருகே சேந்தங்குடியை சேர்ந்த நடராஜன் என்பவரது வீட்டில் பெரிய தூங்குமூச்சி மரம் நேற்று காலை திடீரென வேரோடு சாய்ந்து வீட்டின் மீது விழுந்தது.
நாகர்கோவில்: குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக சாரல் மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்துள்ளது. இந்நிலையில், குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை புயலாக மாறும் வாய்ப்புள்ளதால் குமரி மாவட்டத்தில் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று மீன்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். இருப்பினும் நேற்று காலையில் மீனவர்கள் வழக்கம்போல் மீன்பிடிக்க சென்றிருந்தனர்.
குளிருக்கு பெண் பலி: பெரம்பலூர் மாவட்டம் பாடாலூரில் அரசு மேல் நிலைப்பள்ளி அருகிலுள்ள பஸ் ஸ்டாப்பில் 55 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் மழையி னால் குளிரெடுத்து நடுங்கிக்கொண்டிருந்தார். போலீசார் அவரை அரசு மருத்துவமனையி¢ல் சேர்த்தனர். அங்கு அவர் பரிதாபமாக இறந்தார்.

**தென் தமிழகத்தில் இன்றும் கனமழை பெய்யும்**

சென்னை: வங்க கடலில் நிலை கொண்டுள்ள தீவிர காற்றழுத்தம் மேலும் வலுவடைந்ததையடுத்து தமிழகம் புதுச்சேரியில் இன்றும் பரவலாக மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் தென் கிழக்கு திசையில் உருவான காற்றழுத்தம் தீவிரம் அடைந்தையடுத்து தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. தென் கிழக்கு திசை யில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேலும் தீவிரம் அடைந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும் வாய்ப்புள்ளது.
அதனால், கடலில் சீற்றம் காணப்படும். மணிக்கு 45 கிமீ முதல் 55 கிமீ வேகத்தில் காற்று வீசும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி,

தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பொதுவாக மேகமூட்டம் காணப் படும். விட்டு விட்டு மழை பெய்யும்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 84 அடியானது**



மேட்டூர்: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்துள்ளதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாகவே இருந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை அணைக்கு விநாடிக்கு 3,705 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று மாலை விநாடிக்கு 2,721 கனஅடியாக குறைந்தது. அணையிலிருந்து பாசன தேவைக்காக விநாடிக்கு 5,510 கனஅடி நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் 84.95 அடியாக இருந்த அணை நீர்மட்டம், நேற்று மாலை 84.71 அடியாக குறைந்தது. நீர் இருப்பு 46.81 டிஎம்சி.

**இன்றைய வேளாண் செய்திகள்**

4.12.2013

## காரிமங்கலம் அருகே மருத்துவ குணம் கொண்ட காட்டுயானம் நெல் சாகுபடி கலெக்டர் பார்வையிட்டார்



தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் ஒன்றியம் கெட்டுக்கொட்டாய் கிராமத்தை சேர்ந்தவர் முன்னாள் எம்.எல்.ஏ. மாதப்பன். விவசாயியான இவர் தனது தோட்டத்தில், 7 அடி உயரம் வளரக்கூடிய காட்டுயானம் என்ற பாரம்பரிய நெல்லை பயிரிடப்பட்டுள்ளார்.

மேலும் எலுமிச்சனஅள்ளியை சேர்ந்த விவசாயி சாம்ராஜ் என்பவர் தனது தோட்டத்தில் குடைமிளகாய் பசுமைக்குடில் அமைத்துள்ளார். இதனை கலெக்டர் விவேகானந்தன் பார்வையிட்டார். அப்போது கலெக்டர் கூறும்போது, தர்மபுரி மாவட்டத்தில், நெல், சிறுதானியங்கள், பயிறு வகைகள், பருத்தி, கரும்பு, எண்ணெய் வித்துக்கள் 1 லட்சத்து 62 ஆயிரம் ஹெக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் தோட்டக்கலைப் பயிர்களான பழப்பயிர்கள், காய்கறிப்பயிர்கள், மரவள்ளி, வாசனை திரவியப்பயிர்கள், மஞ்சள், மருத்துவப்பயிர்கள், மலர்கள் உள்ளிட்டவைகள் மொத்தம் 46 ஆயிரத்து 610 ஹெக்டரில் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன.

தர்மபுரி மாவட்டத்தில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் பல்வேறு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தர்மபுரி மாவட்டத்தில் தனித்துவமான பயிர்கள்

சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது காரிமங்கலம் ஒன்றியத்தில் கெட்டுக்கொட்டாய் கிராமத்தில் பாரம்பரிய நெல்லான காட்டுயானம் என்ற நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதனுடைய வளர்ச்சி மிகவும் அபரிதமாக உள்ளது. இந்த நெற்பயிர் மழை வெள்ளத்தையும், வறட்சியையும் தாங்கி வளரக் கூடியது. பாரம்பரிய நெல்லான காட்டுயானம் எளிதில் ஜீரணமாகக்கூடியது, மலச்சிக்கலை நீக்கக்கூடியது, நரம்புகளை பலப்படுத்தும் தன்மை கொண்டது என்று கூறப்படுகிறது. நோய் எதிர்ப்புசக்தி மிக்க இதில் பலமடங்கு புரதச்சத்து, நார்ச்சத்துள்ள இந்த நெல் இயற்கை தந்த வரமாக உள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில், அதிகளவில் விளையும் நவதானியங்கள், தோட்டக்கலைப்பயிர்கள் உள்ளிட்ட அனைத்துவகை வேளாண் உற்பத்திப் பொருட்களையும் நல்ல விலையில் சந்தைப்படுத்தவும், மதிப்புக்கூட்டி விற்பனை செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேளாண் தொடர்புடைய தொழில்களை விவசாயிகள், தொழில்முனைவோர் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

## குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நீடிப்பு தமிழ்நாட்டில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும் வானிலை மையம் அறிவிப்பு



சென்னை,

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அதே இடத்தில் நீடிக்கிறது. அதன் காரணமாக தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களில் இன்று (புதன்கிழமை) மழை பெய்யும் என்று சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது.

<u>குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி</u>

வடகிழக்கு பருவமழை தமிழ்நாட்டில் பெய்துவருகிறது. இலங்கை அருகே வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி அது வலுப்பெற்று தாழ்வு பகுதியாக மாறியது. அது மேலும் தீவிரம் அடைந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக நேற்றே மாறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இனிமேல் அது வலுப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மண்டல இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. இலங்கை அருகே தென்மேற்கு வங்க கடலில் நேற்று முன்தினம் தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியாக இருந்தது அதே இடத்தில் நிலை கொண்டுள்ளது.

அது இன்னும் 24 மணி நேரத்தில் வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாற உள்ளது. ஆனால் எந்த திசைக்கு செல்லும் என்று இப்போது கூறமுடியாது. அது போகும் திசையைப் பொருத்துதான் இனிமேல் பெய்யக்கூடிய மழை எந்த அளவுக்கு எங்கே பெய்யும் என்று சொல்ல முடியும்.

அது வடக்கு நோக்கி நகர்ந்துவிட்டால், தமிழ்நாட்டில் மழை குறையும்.

<u>அநேக இடங்களில் மழை பெய்யும்</u>

இன்று தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களிலும், உள்மாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்யும். சென்னையில் சில நேரங்களில் சில பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்தமழை அளவு வருமாறு:–

<u>சிதம்பரம்</u>

குடவாசல், சிதம்பரம் தலா 12 செ.மீ., ராமேசுவரம், நன்னிலம், பாம்பன், பாபநாசம் தலா 10 செ.மீ., சீர்காழி 9 செ.மீ., அண்ணா பல்கலைக்கழகம் 8 செ.மீ., கொள்ளிடம், மணிமுத்தாறு, அம்பாசமுத்திரம் தலா 7 செ.மீ., தாராபுரம், தரங்கம்பாடி, சென்னை விமான நிலையம் தலா 6 செ.மீ., காட்டுமன்னார்கோவில், நாகப்பட்டினம், சென்னை டி.ஜி.பி. அலுவலகம், மயிலாடுதுறை, சென்னை வடக்கு, வலங்கைமான், சேரன்மகாதேவி, பரங்கிப்பேட்டை, மரக்காணம் தலா 5 செ.மீ., கடலூர், நாங்குநேரி, செய்யூர், திருவிடைமருதூர், ஜெயங்கொண்டம், சேத்தியாதோப்பு, அறந்தாங்கி, வானூர் தலா 4 செ.மீ., ராமநாதபுரம், கழுகுமலை, திண்டிவனம், செந்துறை, புதுச்சேரி, விருத்தாசலம், நீடாமங்கலம், தஞ்சை, அன்னூர், நெய்வேலி, செம்பரம்பாக்கம், ஒட்டப்பிடாரம், தொழுதூர், சத்திரப்பட்டி, காரைக்கால், வேதாரண்யம், தாம்பரம், காரைக்குடி, கல்பாக்கம், கள்ளக்குறிச்சி, பேராவூரணி, சமயபுரம், செஞ்சி, திருச்சிநகரம் தலா 3 செ.மீ.,

<u>ஸ்ரீவைகுண்டம்</u>

திருவண்ணாமலை, மாயனூர், ஆடுதுறை, கும்பக்கோணம், நத்தம், புள்ளம்பாடி, கரூர், பாபநாசம் (தஞ்சை மாவட்டம்), லால்குடி, மதுராந்தகம், முத்துப்பேட்டை, அவிநாசி, அதிராம்பட்டினம், திருவையாறு, அரியலூர், பொள்ளாச்சி, வாடிப்பட்டி, வெம்பாவூர், திருவாடனை, திருத்துறைப்பூண்டி, விழுப்புரம், கிராண்ட் அணைக்கட்டு, தேவகோட்டை, காஞ்சீபுரம்,

ஸ்ரீவைகுண்டம், பெரம்பலூர், ஆரணி, கந்தர்வகோட்டை, சிவகங்கை, சங்கராபுரம், மைலம், மகாபலிபுரம், பட்டுக்கோட்டை, பெனுகொண்டாபுரம், இளையான்குடி, திருப்பூர், மங்களாபுரம், ஒரத்தநாடு, வந்தவாசி, பாண்டவராயர் தலை, திருக்கோவிலூர் தலா 2 செ.மீ., விராலிமலை, ஸ்ரீமுஷ்ணம், பண்ருட்டி, கடலாடி, மணப்பாறை, அருப்புக்கோட்டை, பரமக்குடி, காவேரிப்பாக்கம், அரிமளம், கோவை, துறையூர், அரவக்குறிச்சி, திருப்புவனம் உள்பட 50–க்கும் மேற்பட்ட இடங்களில் தலா 1 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

## வரத்து அதிகரிக்க தொடங்குவதால் சின்னவெங்காயம் கிலோ ரூ.60 ஆக குறைந்தது



கடந்த 3 மாதங்களுக்கு மேலாகவே சின்னவெங்காயத்தின் விலை ஏறுமுகமாகவே காணப்பட்டது. ஆரம்பத்தில் கிலோ ரூ.35 வரை விற்கப்பட்ட இந்த வெங்காயம் கடந்த வாரம் அதிகபட்சமாக ரூ.80–க்கும் கூடுதலாக விற்கப்பட்டது.

மதுரை,

உள்ளூர் பகுதியில் விளைச்சல் குறைந்ததே இதற்கு காரணம் என கூறப்பட்டது. இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பயிரிடப்பட்ட சின்னவெங்காயம் இப்போது அறுவடை ஆகிக்கொண்டு இருப்பதால் அவை விற்பனைக்கு வந்து கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக அதன் விலை படிப்படியாக குறைந்து வருகிறது. நேற்று மதுரை மார்க்கெட்டில் முதல் தர சின்னவெங்காயம் கிலோ ரூ.60 வரை விற்கப்பட்டது. இந்த வெங்காயம் தரத்துக்கு ஏற்ப ரூ.40 முதல் 60 வரை விலை இருந்தது. வரத்து அதிகரித்து வருவதால் அதன் விலை இன்னும் 2 வாரங்களில் கணிசமாக குறையும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

அதேபோல் பெரிய வெங்காயத்தின் வரத்தும் கர்நாடக மாநிலத்திலிருந்து அதிகரித்து வருவதால் அதன் விலையும் குறைந்து வருகிறது. நேற்று பெரிய வெங்காயம் கிலோ ரூ.20 முதல் 40 வரை விற்றது. இதன் விலையும் இனி வரும் நாட்களில் குறையும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகையை உடனடியாக வழங்க வேண்டும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி வலியுறுத்தல்

அறந்தாங்கி,

கடந்த ஆண்டு பயிர் காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் காப்பீட்டு தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என்று வலி யுறுத்தி இந்திய கம்யூனி ஸ்டு கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள் ளது.

கிளை செயலாளர்கள் கூட்டம்

அறந்தாங்கி ஒன்றிய இந்திய கம்யூனிஸ்டு கட்சி யின் நிர்வாகக்குழு கிளைச் செயலாளர்கள் கூட்டம், அறந்தாங்கியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடை பெற்றது. கூட்டத்திற்கு ஒன் றியக் குழு உறுப்பினர் ராஜம்பாள் தலைமை தாங் கினார். மாவட்டச் செயலாளர் செங்கோடன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப் பினர் மாதவன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினர். ஒன்றியச் செயலாளர் ராஜேந்திரன் வேலை அறிக்கை சமர்ப்பித்தார்.

கூட்டத்தில் ராஜமாணிக் கம், தண்டாயுதபாணி, சிற்றரசு, வேலாயுதம், ரெத்தினம், சுப்பிரமணியன், கிருஷ்ண சாமி, ராமசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வரு மாறு;-

மருத்துவ முகாம்

கோமாரி நோய் பரவாமல் தடுப்பதோடு, கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இறந்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க சிறப்பு மருத்துவ முகாம் நடத்த வேண்டும்.

கல்லணைக் கால்வாய் கடைமடைப் பகுதியில் காய்ந்து வரும் பயிர்களை காக்க கல்லணைக் கால் வாயில் முறை வைக்காமல் தண்ணீர் திறக்க வேண்டும். கடந்த ஆண்டு பயிர்காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் காப்பீட்டு தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. முடிவில் நகரச் செயலாளர் நாடிமுத்து நன்றி கூறினார்.

## மேலாண்மை வாரியத்தை உடனே அமைக்க வலியுறுத்தி தஞ்சையில் காவிரி உரிமை மீட்புக்குழுவினர் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர்,

காவிரி மேலாண்மை வாரியத்தை உடனே அமைக்க வலியுறுத்தி காவிரி உரிமை மீட்புக்குழுவினர் தஞ்சையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

காவிரி உரிமை மீட்புக்குழு

காவிரி உரிமை மீட்புக்குழுவினர் சார்பில் தஞ்சை ரெயிலடியில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. காவிரி மேலாண்மை வாரியத்தை உடனே அமைக்க இந்திய அரசை வலியுறுத்தியும், கர்நாடகத்திடம் இருந்து மீதி தண்ணீரை உடனே பெற்றுத்தர தமிழக அரசை வலியுறுத்தியும் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஒருங்கிணைப்பாளர் மணியரசன் தலைமை தாங்கினார்.

ம.தி.மு.க. மாநில துணை பொது செயலாளர் துரை.பாலகிருஷ்ணன், தமிழர் தேசிய இயக்க பொது செயலாளர் அயனாபுரம் முருகேசன், தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் மணிமொழியன், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் நல்லதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

காவிரி மேலாண்மை வாரியம்

இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். பின்னர் ஒருங்கிணைப்பாளர் மணியரசன் நிருபர்களிடம் கூறியதாவது:–

காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி ஒழுங்குமுறை குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்க வேண்டும். இந்திய அரசு கருகும் பயிரை காப்பாற்ற காவிரி மேற்பார்வை குழு கூறியபடி கர்நாடகம் தர வேண்டிய 26 டி.எம்.சி. மீதி தண்ணீரை உடனே திறந்து விட அரசியலமைப்பு சட்ட விதி 355–ன் கீழ் கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

தமிழக அரசு இனியும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக அனைத்துக்கட்சி கூட்டத்தை கூட்டி தமிழகம் முழுவதும் காவிரி எழுச்சி நாள் பேரணி நடத்த வேண்டும். மேலும் தமிழக முதல்–அமைச்சர் தலைமையில் அனைத்துக்கட்சி

குழுவினர் பிரதமரை சந்தித்து 26 டி.எம்.சி. தண்ணீர் பெறவும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் விடுதலை தமிழ்ப்புலிகள் கட்சி அமைப்பு செயலாளர் அருண்மாசிலாமணி, தமிழக உழவர் முன்னணி பொது செயலாளர் காசிநாதன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் உதயகுமார், தமிழ்தேசிய பொதுவுடமைக்கட்சி மாவட்ட செயலாளர் குழ.பால்ராசு, நாம் தமிழர் கட்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தர்மபாலா, தமிழர் தேசிய இயக்க மாவட்ட செயலாளர் பொன்.வைத்தியநாதன், தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் செங்கொடிச்செல்வன், இணை செயலாளர் பழ.ஜெகதீசன், உழவர் உரிமை இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் தங்கராசு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நெல்லிக்குப்பம் இ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை தொடக்கம்



நெல்லிக்குப்பம் இ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை சிறப்பு பூஜையுடன் தொடங்கியது. பின்னர் கரும்பு அரவை நடைபெறும் இயந்திரத்தில் சர்க்கரை ஆலை பொது மேலாளர்கள் பாலாஜி, கருணாகரன் ஆகியோர் கரும்புகளை போட்டு அரவையை தொடங்கி வைத்தனர்.

.

நிகழ்ச்சியில் பொறியாளர் செந்தில் இனியன், ரசாயன உற்பத்தியாளர் சஜீத் மற்றும் ஏராளமான விவசாயிகள்இதன் பின் பொது மேலாளர் பாலாஜி நிருபர்களிடம் கூறியதாவது:– 2013–2014 ஆண்டு அரவைக்கு 30 ஆயிரம் ஏக்கர் கரும்பு பயிர் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 8½ லட்சம் டன் கரும்பு அரவை நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. போக்குவரத்து பாதிக்கப்படாமல் கரும்புகளை ஆலைக்கு கொண்டு வருவதற்கு சித்தரசூரில் இருந்து நெல்லிக்குப்பம் வரை மாற்று பாதை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# மஞ்சள் விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை



மஞ்சள்-வாழை

அரவக்குறிச்சி மற்றும் சுற்று வட்டாரப்பகுதி பொது மக்கள் பெரும்பாலும் விவசா யத்தையே நம்பி வாழ்கின்றனர். அமராவதி ஆற்றுப்பாசனம் உள்ள பகுதிகளான ராஜபுரம், சீரங்க கவுண்டனூர்,நம்பாகவுண்டனூர், தொக்குப் பட்டிபுதூர், சின்னமநாயக் கனூர் உள்ளிட்ட கிராமங் களில் மஞ்சள் மற்றும் வாழை பயிரிடுகின்றனர்.

ஆனி மற்றும் ஆடிப் பட்டத்தில் மஞ்சளை நடவு செய்கின்றனர். இது 10 மாதங்களில் மகசூல் தருகின்றது. 1 ஏக்கர் நிலத்தில் சுமார் 7 டன் முதல் 13 டன் வரை மகசூல் தருகின்றது. 5 கிலோ பச்சை மஞ்சளை வேகவைத்தால் 1 கிலோ அல்லது 1 கிலோ 500 கிராம் கிடைக்கும். கடந்த ஆண்டு வேகவைத்த மஞ்சள் கிலோ ரூ.60 முதல் 70 வரை விலை போனது. வேகவைக்கப் படாத விதை மஞ்சள் கிலோ ரூ. 35 முதல் 40 வரை விலை போனது.

விலை வீழ்ச்சி

தற்போது இந்த ஆண்டு மஞ்சள் விளைச்சல் அதிகம் என்பதால் விலை வீழ்ச்சி யடைந்து உள்ளது. இதனால் இந்த பகுதி விவசாயிகள் கவலையில் உள்ளனர். தற்போது 1 கிலோ வேகவைத்த மஞ்சள் ரூ.45 முதல் ரூ.65 வரை விலை போவதாக கூறப் படுகிறது.

இதுபற்றி மஞ்சள் வியாபாரி நம்பாகவு ண்டனூரை சேர்ந்த மணி கூறியதாவது:-

அரவக்குறிச்சி பகுதியில் மஞ்சள் அதிகம் பயிரிடு கின்றனர். இங்கு விளையும் மஞ்சள் தமிழகத்தில் மஞ்சள் மார்க்கெட்டான ஈரோட் டிற்கும், மகாராஷ்ட்ரா, கர்நாடகா, ஆந்திரா, கேரளா, அஸ்ஸாம், குஜராத் ஆகிய வெளிமாநிலங்களுக்கும்

அனுப்பப்படுகின்றது. தற்போது சித்திரை மாதம் விளைவித்த மஞ்சள் விலை குறைவாக உள்ளதால் விவசா யிகள் மஞ்சளை சேமித்து வைத்துள்ளனர். நல்ல விலை கிடைக்கும்போது விற்றுக் கொள்ளலாம் என்று எண்ணியுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

விலை உயர்வுக்காக…

இதுபற்றி இந்த பகுதி விவசாயிகள் கூறும்போது, அதிக அளவு மஞ்சள் விளைச்ச லால் மகிழ்ச்சி அடைந்த நாங்கள், தற்போது விலை வீழ்ச்சியால் கவலை அடைந்து உள்ளோம் என்றனர்.

மஞ்சள் பயிரிட ஆகும் கொள்முதல் செலவு அதிகம். ஒரு நாளைக்கு ஆணுக்கு ரூ. 250-ம், பெண்ணுக்கு ரூ. 150-ம் கூலியாக கொடுக்க வேண்டியது உள்ளது. இந்த கொள்முதல் மற்றும் செல வினங்கள் போக லாபம் பார்ப்பது என்பது மிகக் கடினமாக உள்ளது.எனவேதான் கடந்த சித்திரை மாதம் விளைவித்த மஞ்சளை அவ்வப்போது உலர்த்தி பக்குவப்படுத்தி நல்ல விலையை எதிர்பார்த்து சேமித்து வைத்துள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறி னர்.